1992 ஏப்ரல் 3]

469—

விளைபொருள்கள் ஈட்டுக்கடன் அளித்தல்.

*4439 திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

விளைபொருள்கள் ஈட்டுக்கடன் அனைத்து விளைபொருள்கள் மீதும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அழுகும் பொருட்கள் தவிர்த்து, மற்ற அனைத்து வேளாண் விளைபொருட்கள் மீதும் பாகுபாடின்றி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும், ஈட்டுக்கடன் (பிளட்ஜ் லோன்) கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்களுக்கு எல்லாம் பெரும்பாலும் அறுவடை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திலேதான் வருகிறது. அந்த அறுவடைக் காலங்களிலே குறிப்பாக அறுவடை பொருள் விலை வீழ்ச்சி ஏற்படுவது ஆண்டுதோறும் நடக்கின்ற சம்பவமாக இருக்கின்ற நேரத்தில் இந்த "பி லோன்" என்று சொல்லப்படுகின்ற அந்த விவசாய விளைபொருள் மீது கொடுக்கப்படுகின்ற கடன்கள் பெரும்பாலும் எங்களது கோவை மாவட்டம் போன்ற பகுதியில் வணிகப் பொருட்களுக்குத்தான் குறிப்பாக நிலக்கடலை, புகையிலை, பருத்தி இப்படிப்பட்ட பொருட்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். நெல் போன்ற பொருட்களுக்கு கொடுப்பதில்லை. அதனால் அந்த தானியங்களுக்கும் அந்த "பி லோன்" கொடுக்கின்ற நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்பிகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே உணவுப் பொருட்கள், விளைபொருட்களுக்கும் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். உணவுப் பொருள் விளைபொருளாக இருப்பதனால், அதனுடைய மதிப்பிலே 70 சதவீதமும், பணப் பொருள் விளைபொருளாக இருந்தால் அதற்கு 60 சதவீதமும், அந்தக் கடனைக்

கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி எங்காவது கொடுக்கப்படவில்லை என்றால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, கோவை மாவட்டத்திலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 470, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

470—

கனிமச் சுரங்கத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம்.

*4072 திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கனிமக்கற்களை வெட்டியெடுக்கும் சுரங்கங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியே கூலி எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சுரங்கத் தொழிலானது மத்திய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதால், தமிழக அரசால் ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்யப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிம கற்களை வெட்டி எடுக்கும் சுரங்கத்தில் கடந்த தி. மு. க. அரசின் கொள்கை தவறாக இருந்ததால் தமிழகத்திலுள்ள நிறைய சுரங்கங்களில் வேலை நின்றுவிட்டது. அதில் வேலை செய்த தொழிலாளர்கள் அண்டை மாநிலங்களுக்கு சென்று பிழைக்க நேரிட்டது. ஆகவே இதை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி, அவர்களுக்கு தகுந்த கூலி கிடைக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சுரங்கத் தொழிலானது மத்திய அரசினுடைய அதிகாரத்திற்